**செய்தி வெளியீடு எண்:057** **நாள்: 25.01.2017**

<u>செய்தி வெளியீடு</u>

<u>தந்தி தொலைக்காட்சிக்கு "தேசிய ஊடக விருது" கிடைத்ததையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (25.1.2017) தந்தி தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் திரு பாலசுப்பிரமணியன் ஆதித்தன் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:</u>

"2016ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டியதின் அவசியம் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்காக இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் டெல்லியில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழாவில், தந்தி தொலைக்காட்சிக்கு "தேசிய ஊடக விருது" என்ற சிறந்த தொலைக்காட்சிக்கான தேசிய விருதினை மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் வழங்கியது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின்போது, வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியதுடன், அரசியல் செய்திகள், ஆயுத எழுத்து, மக்கள் மன்றம், மக்கள் யார் பக்கம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் அரசியல் நிகழ்வுகளை நேரடியாக, நடுநிலையோடு மக்களுக்கு கொண்டு சென்ற தந்தி தொலைக்காட்சியின் சேவை பாராட்டுக்குரியதாகும்.

உலக நிகழ்வுகளை உடனுக்குடன் நடுநிலையோடு மக்களுக்கு கொண்டு சேர்த்திடும் தந்தி தொலைக்காட்சியின் சேவை மேன்மேலும் சிறப்புடன் தொடர்ந்திடவும், மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கி, விருதுகள் பல பெற்றிடவும் எனது வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்."

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**

**நாள் : 25 .1. 2017**